உ

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஸமேத ஸ்ரீ சிகாகிரீஸ்வரர் ஸஹாயம்

குடுமியான்மலை தர்மக்ஞ ஸ்ரீ பஞ்சாபகேச தீக்ஷிதர் நினைவாக,

**K.A. பஞ்சாபகேச தீக்ஷிதர் சாரிடபிள் டிரஸ்ட்**

(Regd. No. 76/2014)

# மூலம் நடத்தப்படும் குடுமியான்மலை பங்குனி உத்தர நூற்றி பதினோராவது வருஷ (2026) சதுர் வேத பாராயண ஸந்தர்ப்பணை கைங்கர்யப் பத்திரிக்கை

**விசுவாவஸு வருஷம் பங்குனி மாதம் 9ஆம் தேதி திங்கட்கிழமை முதல் பங்குனி மாதம் 18 ஆம் தேதி புதன்கிழமை வரை (23.03.2026 - 01.04.2026)**



नित्याय नित्योत्सवमङ्गलाय नीहारभानुस्फुटशेखराय।
त्रिलोचनाय त्रिपुरान्तकाय शिखागिरीशाय नमश्शिवाय ।।

शिखागिरीशभामिनीं शिखरिमूलसञ्चारिणीं शिवाङ्गसुखवासिनीं शिवकटाक्षसन्दायिनीम् ।
शिवङ्करकरामुमां शिरसिदीप्तनानासुमां शिवामखिलदायिकां अखिलनायिकामाश्रये।।



*Vedic Pandits participation during the 110th year of Kudumiyanmalai Vedaparayanam 2025*



உ

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஸமேத ஸ்ரீ சிகாகிரீஸ்வரர் ஸஹாயம்

# புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலை ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஸமேத ஸ்ரீ சிகாகிரீஸ்வரர் பங்குனி உத்தர ப்ரஹ்மோத்ஸவ வேத பாராயணம் வேண்டுகோள்

புதுக்கோட்டை நகருக்கு மேற்கு திசையில் 20 கி.மீ. தூரத்தில் குடுமியான்மலை எனும் சிற்றூர் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருள் புரியும் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி ஸமேத ஸ்ரீ சிகாகிரீஸ்வரர் ஆலயம் 2000 ஆண்டுகள் பழமையானது. மஹிமை தங்கிய இறைவன் ஸ்ரீ நிகேதாசலேஸ்வரர் எனவும் ஜயந்தவனேஸ்வரர் எனவும் சிகாகிரீஸ்வரர் எனவும் திருநாமம் பெற்று அகிலாண்டேஸ்வரி ஸமேதராய் இந்திரனால் பூஜிக்கப்பெற்று மகப்பேறு அடைந்த சிறப்புடையது இந்த ஸ்தலம். மேலும் அகஸ்தியர், ஹேமமகரிஷி, சுதீக்ஷ்ணர் முதலிய முனிவர்களாலும், இராவண ஸம்ஹார ப்ரஹ்மஹத்யாதி தோஷ நிவாரணமாக ஸுக்ரீவாதி ஹனுமத் ஸமேதரான ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியாலும் பூஜிக்கப் பெற்றது இத்தலம். ஸ்வேதகேது, நளன், காங்கேயன், மீனத்வஜன், சுந்தர பாண்டியன், பல்லவ மன்னர் முதலியவர்களால் நிர்மாணிக்கபட்ட ஆயிரக்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், அணியொட்டிக்கால் மண்டபம், தசாவதாரம் முதலிய எழில் மிகு சிற்பங்கள், கல்வெட்டுகள், குடவரைக் கோயில் முதலியன பார்க்கப் பார்க்கத் திகட்டாதவை. மலை உச்சியில் விநாயகர், தண்டபாணி, அறுபத்துமூவர் மற்றும் கோயிலின் நுழை வாயிலில் வீரஹனுமார் தர்சனம் வரப்ரஸாதம். கோயிலில் உட்புறம் மூன்று தீர்த்தங்களும் வெளியில் ஆறு தீர்த்தங்களும் உள்ளன. இவைகள் மிகவும் புனிதமானவை என்று புராணங்கள் கூறுகின்றன. சிற்பங்களும் கல்வெட்டுக்களும் மண்டபங்களும் இந்திய தொல்பொருள் பாதுகாப்பு துறையினராலும் கோவில் பூஜை, திருவிழா முதலியன தமிழக அரசின் அறநிலையத் துறையாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய பெருமைவாய்ந்த குடுமியான்மலை க்ஷேத்ரவாசியான தர்மக்ஞ ஸ்ரீ பஞ்சாபகேச தீக்ஷிதர் அவர்கள் பங்குனி உத்தர ப்ரஹ்மோத்ஸவத்தை ஒட்டி வம்ச பரம்பரையாக வேத பாராயணம் நடத்தி வந்தார். அவர் காஞ்சி

மஹா பெரியவரை போற்றி வேத பாத ஸ்தோத்ரம் (108 ஸ்லோகங்கள்) என்ற நூலை இயற்றி அவரின் வாழ் நாளில் ஸமர்ப்பணம் செய்தார். அவரின் நினைவாக **K.A. பஞ்சாபகேச தீக்ஷிதர் சாரிடபிள் டிரஸ்ட்** (Regd. No. 76/2014) மூலம் நடத்தப்படும் குடுமியான்மலை பங்குனி உத்தர நூற்றி பதினோராவது வருஷ (2026) லோக க்ஷேமார்த்தமான வேத பாராயணம் மற்றும் ஸந்தர்ப்பணை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள், ஸ்ரீ ச்ருங்கேரி ஜகத்குரு மஹாஸ்வாமிகள், ஆகியோரின் பரிபூரணமான அனுக்ரஹத்துடனும் ஆஸ்திக அன்பர்கள் ஆதரவுடனும் விசுவாவஸு வருஷம் பங்குனி மாதம் 9 ஆம் தேதி திங்கட்கிழமை முதல் பங்குனி மாதம் 18ஆம் தேதி புதன்கிழமை வரை ( 23/03/2026 - 01/04/2026 ) 10 நாட்கள் **ஸ்ரீ லக்ஷ்மண கனபாடிகள்** டிரஸ்டி & செயலாளர் [Cell 9444320464] தலைமையில் மிகச் சிறந்த முறையில் **ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் நூற்றாண்டு விழா மகா மணி மண்டபம், சங்கர மடம் புதுக்கோட்டையில்** நடைபெறவுள்ளது.

**க்ருஷ்ண யஜுர்வேத க்ரம பாராயணம் 23/03/2026 முதலும் ரிக், சாம மற்றும் அதர்வ வேத மூல பாராயணங்கள் 28/03/2026 முதலும் நடைபெறும்.**

“வேதோகிலோதர்ம மூலம்" வேதமே அறங்களின் ஆணிவேர் என்ற ஆன்றோர் வாக்கிற்கு இணங்க மறையொலி எங்கும் முழங்கி அதன் மூலம் உலகம் இயற்கை உற்பாதங்களிலிருந்து விடுபட வேத பாராயணம் மிகவும் இன்றியமையாதது என்பது மறுக்க முடியாத சத்ய வாக்காகும். எல்லோரும் இன்புற்றுவாழ பலச்ருதிகள் அடங்கிய இந்த வேத பாராயணத் தொண்டிற்கு ஆஸ்திகோத்தமர்கள் அனைவரும் தொடர்ந்து நல்லாதரவு நல்கி இறை அருளை பெற்றுய்ய வேண்டுகிறோம். அது சமயம் வேதங்களின் பெருமை மற்றும் அவற்றால் விளையும் நற்பலன்கள் பற்றி வித்வான்களின் உபன்யாஸமும் நிகழும். குடுமியான்மலையில் சுவாமி கிரிவலம் 29/03/2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று நடைபெறும்.

இங்ஙனம்

தலைவர் & டிரஸ்டிகள்

**K.A. பஞ்சாபகேச தீக்ஷிதர் சாரிடபிள் டிரஸ்ட்**

(Regd. No. 76/2014)

உ

Pudukkottai District
Kudumiyanmalai Shri Akilandeswari
sametha Shri Sikhagireeswar
Panguni Uthara Brahmotsava
Veda Parayanam
[23/03/2026 – 01/04/2026].

# A HUMBLE REQUEST !

Kudumiyanmalai a village is located at the western side of Pudukkottai at a distance of 20 KMs. Here is located a temple of 2000 years old with main deities Akilandeswari and Shri Sikhagireeswar. His other names are Shri Nikethachaleswarar, Jayanthavaneshwarar. He was worshipped by Lord Indiran and was blessed with a male child. Agasthiyar, Hemamaharishi and Sutheekshnar have performed poojas here. Lord Rama alongwith Sugreevan and Hanuman has performed pooja here to get rid of the sin by killing Ravana. Kings Swethakethu, Nalan, Kangeyan, Meenathwajan, Sundara Pandian and Pallava Kings have erected thousand pillars, hundred pillars, Aniyottikkal Mandapam and Dasavatharam statues. There are other beautiful statues on the hill carved temples which are worth seeing. Lord Ganesh, Dhandapani, 63 Nayanmars are located in the top of the hill. There is a big Hanuman statue at the entrance. There are three Theerthams inside the temple and six more theerthams [water bodies] around the temple. As per Puranas these are considered as holy water. While the statues and stone inscriptions are under the control of Archaeological Survey of India [ASI] Temple maintenance and poojas are taken care of by the Tamilnadu Hindu Religious and Charitable Endowment. In this ancient and holy village of Kudumiyanmalai, Dharmagna Shri K.A. Panchapagesa Dikshithar was conducting Vedaparayanam synchronising with the Panguni Utharam festival. He honoured Kanchee Mahaperiyava by writing Veda Paada Stothram (108 slokas) during his life time.

This is the 111th year of Vedaparayanam and is being

conducted in memory of K.A. Panchapgesa Dikshithar under the leadership of Shri S. Lakshmana Ghanapati [Cell 94443 20464] Trustee and Secretary K.A.Panchapagesa Dikshithar Charitable Trust between 23/03/2026 and 01/04/2026 at Shri Chandrasekarendra Saraswathi Swamigal Nootrandu Vizha Maha Mani Mandapam, Shankara Madam, Pudukkottai.

Krishna Yajur Krama Parayanam commences on 23/03/2026 and Rig, Sama and Atharva Vedaparayanam from 28/03/2026.

Therefore all are kindly requested to contribute liberally to conduct this Vedaparayanam in a grand manner and receive the blessings of Lord Sikhagireeswarar. This year Girivalam at Kudumiyanmalai falls on 29/03/2026 [Sunday].

Donations can be sent by DDs/Cheques drawn in favour of **K A PANCHAPAGESA DIKSHITHAR CHARITABLE TRUST** to the following address:


P. Krishnamurthy,
Treasurer K A Panchapagesa Dikshithar Charitable Trust,
Lakshmi Nivas, F2 A Block, Krishnarekha Apts, No.11
SRVS Colony, Keelkattalai, Chennai-600117.
Cell 94449 79959/93637 34577 Land line 044-22474847


On line contributions [NEFT] may please be sent to
**K A PANCHAPAGESA DIKSHITHAR CHARITABLE TRUST** CUB, Madipakkam Branch
SB Account Number **500101010466104**
IFSC **CIUB0000151**. Credit information may invariably please be mailed to **kapdtrust@gmail.com**
or WhatsApp 9444979959.
**Please visit : www.kudumiyanmalaivedam.org.in**
**https://www.youtube.com/@kapdtrustpudukkottai8438/featured**
Donations for Corpus Fund are welcome

QR Code for Payment

Yours truly
Chairman and Trustees
K.A. PANCHAPAGESA DIKSHITHAR CHARITABLE TRUST
(Regd. No. 76/2014)

UPI G Pay **9444772377** PhonePe Paytm












**Shri Cards,** Ch-5, Cell : 9840188399